**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பழங்குடியினர் நலம் - 2020-2021-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு - பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளான சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள் மற்றும் விளக்குகள் அமைத்து தருதல் - அரசாணை (நிலை) எண். 109, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 10.11.2020-இல் ரூ.39469.17 இலட்சத்திற்கு நிருவாக ஒப்பளிப்பும், அதில் முதற்கட்டமாக ரூ.12999.77/- இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டது – 2021-2022-ஆம் நிதியாண்டில் இரண்டாம் கட்டமாக ரூ.12385.83 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [ப.மே1(2)] துறை**

அரசாணை(நிலை) எண். 79

நாள் 26.10.2021
ஐப்பசி மாதம் 9-ஆம் நாள்,
பிலவ வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2052
படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண். 109, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [ப.மே1(2)] துறை, நாள் 10.11.2020
2. அரசு கடிதம் (நிலை) எண்.38/ப.மே1(2)/2021, நாள் 17.03.2021.
3. பழங்குடியின நல இயக்குநரின் கடித ந.க.எண்.பமே/அ3/5171/2021, நாள் 08.04.2021

*******

**ஆணை :-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் ரூ.394,69,17,000/- (ரூபாய் முன்னூற்று தொண்ணூற்று நான்கு கோடியே, அறுபத்து ஒன்பது இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) செலவில் சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள் மற்றும் சூரிய மின் விளக்குகள் போன்றவைகளை மாநில நிதியிலிருந்து மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ள நிருவாக ஒப்பளிப்பு வழங்கியும், அதில் முதற்கட்டமாக மேற்படி பணிகளை

முன்னுரிமை அடிப்படையில் 2020-2021-ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள ரூ.12999.77/-இலட்சத்திற்கு (ரூபாய் நூற்று இருபத்தொன்பது கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து எழுபத்து ஏழாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசால் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் ரூ.394,69,17,000/- (ரூபாய் முன்னூற்று தொண்ணூற்று நான்கு கோடியே, அறுபத்து ஒன்பது இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) செலவில் கீழ்க்கண்டவாறு சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள் மற்றும் சூரிய மின் விளக்குகள் போன்றவைகளை மாநில நிதியிலிருந்து மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ள நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது:-

| **வ. எண்** | **திட்ட விவரம்** | **பழங்குடியினர் நலத் துறை (ரூ.இலட்சத்தில்)** | **வனத்துறை (ரூ.இலட்சத்தில்)** | **மொத்தம் (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1. | சாலை/இணைப்பு சாலை வசதிகள் | 7999.95 | 21421.39 | 29421.34 |
| 2. | தெரு விளக்கு அமைத்தல் | 260.01 | 119.43 | 379.44 |
| 3. | சூரிய விளக்கு அமைத்தல் | 207.60 | 1491.45 | 1699.05 |
| 4. | குடிநீர் வசதி ஏற்படுத்துதல் | 2456.23 | 5513.11 | 7969.34 |
| **மொத்தம்** | | **10923.79** | **28545.38** | **39469.17** |

மேலும், இவ்வரசாணையில், **முதற்கட்டமாக** மேற்படி பணிகளை முன்னுரிமை அடிப்படையில் 2020-2021-ஆம் நிதியாண்டில் மேற்கொள்ள ரூ.12999.77/- இலட்சத்திற்கு (ரூபாய் நூற்று இருபத்தொன்பது கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து எழுபத்து ஏழாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், மேற்காணும் அரசாணையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.12999.77 இலட்சத்தினை, பழங்குடியினர் நல இயக்குநரின் செயல்முறைகளின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு ரூ.6222.57 இலட்சம் மற்றும் வனத்துறைக்கு ரூ.6777.18 இலட்சத்தினை பகிர்ந்தளித்து ஆணையிடப்பட்டுள்ளது என்றும், மேலும், அணுகு சாலைகள், தெரு விளக்குகள், சூரிய ஒளி விளக்கு வசதி மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்காக ரூ.394,69,17,000/- நிதி ஒதுக்கீட்டினை **மூன்று ஆண்டுகளில்** மேற்கொள்ள நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நிலையில், இதில் **இரண்டாம் கட்டமாக** மேற்படி பணிகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள 2021-2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.130 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் பழங்குடியின நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் ரூ.394,69,17,000/- (ரூபாய் முன்னூற்று தொண்ணூற்று நான்கு கோடியே, அறுபத்து ஒன்பது இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) செலவில் சாலை வசதிகள், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள் மற்றும் சூரிய மின் விளக்குகள் போன்றவைகளை மாநில நிதியிலிருந்து மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ள நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டதில், மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை முன்னுரிமை அடிப்படையில் நடைமுறையில் உள்ள தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளி நடைமுறைகளை பின்பற்றி அமைப்பதற்கு 2021-2022-ஆம் நிதியாண்டில் இரண்டாம் கட்டமாக ரூ.123,85,83,000/- (ரூபாய் நூற்று இருபத்து மூன்று கோடியே எண்பத்து ஐந்து இலட்சத்து எண்பத்து மூன்றாயிரம் மட்டும்)க்கு இணைப்பில் உள்ளவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> “4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 02 - பழங்குடியினர் நலன் - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் AB – பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும் கிராமப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் - 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்.
> (IFHRMS DPC: 4225-02-800-AB-41601)
> (Old DPC: 4225-02-800-AB-1600)”

5. மேலே பத்தி 3-இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3-இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான பணிகளை மேற்கொள்ள உரிய செயல்முறை ஆணையினை வெளியிடுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாகவும், பேரூராட்சியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை பேரூராட்சித் துறை மூலமாகவும், வனத்துறையின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மூலமாகவும் மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. மேலும்,

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை / பேரூராட்சித் துறை திட்ட செயல்பாடு குறித்த மாதாந்திர முன்னேற்ற அறிக்கையினை (Monthly Progress Report)இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5 அவர்களுக்கு தவறாமல் அனுப்பி வைக்குமாறும், இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5 அவர்கள் மேற்படி மாதாந்திர முன்னேற்ற அறிக்கையினை (Monthly Progress Report) ஒருங்கிணைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் உரிய காலத்தில் நிதி விடுவிப்பதை உறுதி செய்யுமாறு பழங்குடியினர் நல இயக்குநரையும், பணிகளை காலதாமதமின்றி மேற்கொள்ள உரிய இசைவினை அளிக்குமாறு வனத்துறையினையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட பணிகளை திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை [State Balanced Growth Fund (SBGF) and Special Area Development Programme (SADP)] மற்றும் ஊரக வளர்ச்சித் துறையால் வேறு பல திட்டங்களின் மூலம், அவற்றின் நிதிகளிலிருந்து மேற்கொள்ள வாய்ப்புள்ளது என்பதால், மேற்கண்ட பணிகளுக்கான தொகை வேறு பல திட்டங்கள் மூலம் பெறப்படவில்லை என்பதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட பணிகள் State Balanced Growth Fund (SBGF) and Special Area Development Programme (SADP) திட்டங்களுக்கான நிதியிலிருந்து பெறப்படவில்லை என்பதை திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை மற்றும் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு (formerly State Planning Commission) உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 20866/ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்/2021, நாள் 09.06.2021 -இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 600 005.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சைதாப்பேட்டை, சென்னை-600 015.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, சென்னை-600 018.
உறுப்பினர்-செயலர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, சென்னை-600 005

மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் / திண்டுக்கல் / திருநெல்வேலி / வேலூர் / சேலம் / தேனி / நீலகிரி / நாமக்கல் / விழுப்புரம் / திருவண்ணாமலை / ஈரோடு / கடலூர் / அரியலூர் / விருதுநகர் / கன்னியாகுமரி / திருச்சி / பெரம்பலூர் / தர்மபுரி / திருப்பூர் / திருவள்ளூர் / கிருஷ்ணகிரி / நாகப்பட்டினம் / காஞ்சிபுரம்/திருப்பத்தூர்.

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் / திட்ட அலுவலர், கோயம்புத்தூர் / திண்டுக்கல் / திருநெல்வேலி / வேலூர் / சேலம் / தேனி / நீலகிரி / நாமக்கல் / விழுப்புரம் / திருவண்ணாமலை / ஈரோடு / கடலூர் / அரியலூர் / விருதுநகர் / கன்னியாகுமரி / திருச்சி / பெரம்பலூர் / திருப்பத்தூர்/ தர்மபுரி / திருப்பூர் / திருவள்ளூர் / கிருஷ்ணகிரி / நாகப்பட்டினம் / காஞ்சிபுரம்.

மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை- 600 009/600 018.

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 008.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மை செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 600 009.

நிதி [ஆதி(ம)பந] / திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, சென்னை – 600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 5/கமபா/அநமு) துறை, சென்னை – 600 009.

இருப்புக் கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/4/2024

பிரிவு அலுவலர்